1969 மார்ச் 5]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கல்வி இலாகாவிலிருந்துதான் மானியம் நேரடியாக வழங்கப்படுகிறது. ஏற்கனவே அப்படிப்பட்ட நிலைமையைப் போக்க வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. கரு. சீமைச்சாமி : இராமநாதபுரம் ஜில்லாவில் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களுக்குச் சம்பளம் சரியாகக் கிடைக்கவில்லை என்பது வாஸ்தவம்தான். பருவ மழை தவறியதாலே நிலவரி வசூல் முடியவில்லை. அதன் காரணமாக செஸ் போன்ற வரிசளையும் வசூல் செய்ய முடியவில்லை. எனவே அங்கே உள்ள பஞ்சாயத்து யூனியன்களுக்கு இதற்காக அரசாங்கம் மானியமாக இல்லாவிட்டாலும் கடன் ஆகக் கொடுப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : நிதி நிலைமையில் தட்டுப்பாடு ஏற்படும்பொழுது ஒரு தாய் தன்னுடைய குழந்தையைக் காப்பதற்கு எடுத்துக் கொள்கின்ற முயற்சியைப்போன்று அரசாங்கம் அவ்வப்பொழுது உதவி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

உசிலம்பட்டியில் தொழிலாளர் மருத்துவ மனை

*184 வின :—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் **E. S. I.** மருத்துவ மனை கட்டுவதற்கு அரசு உத்தரவிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

(உ) அந்த மருத்துவ மனை எப்போது கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) and (உ) : வினவிற்கு இடமில்லை.

Galvanized pipes purchased by Tamil Nadu Electricity Board

185 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the total quantity and cost of the galvanized pipes purchased for the Tamil Nadu Electricity Board during 1966–67 and 1967–68;

(*b*) the total quantity utilised so far;

(*c*) the stock on hand now;

(*d*) whether the Government have incurred any loss on this; and

(*e*) if so, whether any Committee will be appointed to investigate into the losses?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : (அ) துத்தநாகம் பூசப்பட்ட இரும்புக் குழாய்கள் 1966–67, 1967–68 ஆண்டுகளில் மொத்தம் 9,43,880 மீட்டர் குழாய்கள் 33·66 லட்சம் ரூபாய்க்கு வாங்கப்பட்டன.

(இ) 1966–67, 1967–68 ஆண்டுகளில் மின்சார வாரியம் மொத்தத்தில் 18,05,185 மீட்டர் குழாய்களைப் பயன்படுத்திக் கொண்டது. இதில் மற்ற பிரிவுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட குழாய்களும் முடிவு பெற்ற வேலைகளிலிருந்தும் திட்டங்களிலிருந்தும் திருப்பி எடுத்துக் கொள்ளப்பட்ட குழாய்களும் சேர்ந்துள்ளன.

(உ) 3,45,612 மீட்டர் குழாய்கள் 1968-ம் ஆண்டு மார்ச்சு இறுதியில் கையிருப்பில் இருந்தன.

(எ) 1968-69-ம் ஆண்டில் மேலும் 18 லட்சம் மீட்டர் குழாய்கள் தேவைப்படுவதால், மிச்சமிருப்பதால் விரயம் ஏற்படுவதற்கிடமில்லை.

(ஏ) இவ்வினாவிற்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, is it a fact that the Electricity Board have purchased galvanised pipes only when the necessity for them was felt by them and while using them they did not incur any loss and it was all done in good faith?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : தேவையை எதிர்பார்த்துத்தான் வாங்கப்படுகிறது. மீதம் இருப்பதை, நாம் மேலும் மேலும் திட்டங்களைப் போட்டுக்கொண்டு வருகிற காரணத்தினாலே, அதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே விரயம் ஆகப் போவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலஞ்ச ஊழல்

***166 வினா. —திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

லஞ்ச ஊழலில் ஈடுபட்டதாக நிரூபிக்கப்பட்ட சர்க்கார் ஊழியர்களின் மீது, நடவடிக்கை எடுப்பதுடன் 50 வயதுக்கு முந்தியே கட்டாய ஓய்வுமுறை அமுல்படுத்தப்படுகிறதா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இப்பொழுது நடைமுறையிலே இதுபோன்று நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக 50 வயதிற்குள்ளாக கட்டாய ஓய்வு முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. இதுபோன்ற முறையை அரசாங்கம் எதனால் கையாளுகிறது என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : முதலிலே தொடக்கக் கேள்வி பொதுவாக இருந்த காரணத்தினாலே இப்படிப்பட்ட பதில் சொல்லப் பட்டது. எப்படிப்பட்ட தண்டனை வழங்குவது என்பதுபற்றி இருக்கிற சாட்சியங்களைப் பொறுத்தும், விசாரணை செய்கின்ற அதிகாரியின் முடிவைப் பொறுத்தும் இந்தக் கட்டாய ஓய்வு முறை மேற்கொள்ளப்படுகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : லஞ்ச ஊழல்கள் சம்பந்தமான வழக்குகள் கண்டு பிடிப்பதற்கும், நெல் கொள்முதல் சம்பந்தமாக கடத்தல் பொருள்களைக் கண்டு பிடிப்பதற்கும் தனியாக ஒரு விஜிலன்ஸ் ஸ்குவாட் இருக்கிறது. அதை எடுக்கப் போவதாகச் சொல்கிறார்கள். அது உண்மை தானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அப்படிப்பட்ட ஒரு அமைப்பு உணவுத் துறையின் கீழே செயல்பட்டு வருகிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், லஞ்ச ஊழல்கள், கடத்தல் பொருள்கள் சம்பந்தமாக, கடத்தல் பொருள்கள் எல்லாம் ஒரு போலீஸ் சூப்பிரண்டெண்டெண்ட் வீட்டிலே தர்மபுரியிலே கண்டுபிடிக்கப்பட்டு இருப்பதாகப் பத்திரிகையிலே செய்தி வந்தது. அதுபோன்ற காரியங்கள் குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : கேள்வி, சர்க்கார் ஊழியர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுவதுபற்றி. ஆகவே இந்தக் கேள்வி தொடர்பு இல்லாமல் இருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : லஞ்ச ஊழல்கள் வேறு, கடத்தல் வேறு, லஞ்ச ஊழல்கள் சம்பந்தமாக இப்பொழுது உள்ள தண்டனை என்ன ? இன்னும் அதைக் கடுமையாக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது ?